# OS.No.238/2024, Dated 18.11.2025

**The witness sworn under Oaths Act 1969 on this the day of 18th day of November 2025.**

**வா.சா.1 –கல்பனா க/பெ. சங்கர் வரவழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

இந்திரா எனது அக்கா ஆவார். நான் செப்டாங்குளத்தில் வசிக்கிறேன். வழக்கு சொத்து ஆமனந்தாங்கல் கிராமம், ஆவணியாபுரம் மதுராவில் உள்ளது. இந்த வழக்கு சொத்தின் சர்வே எண். 117/7B ஆகும். வழக்கு சொத்தின் விஸ்தீரனம் ஒரு ஏக்கர் 15 செண்டு ஆகும். வழக்கு சொத்திற்கான ஜக்குபந்தியை வாதி குறிப்பிடவில்லை என்றால் குறிப்பிட்டுள்ளார். 28.03.2003 தேதியிட்ட ஆவணத்தை நான் குறிப்பிட்டுள்ளதில் அந்த ஆவணம் வழக்கு சொத்து சம்பந்தப்பட்ட ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. புஞ்சை சர்வே எண். 117/7C ல் 17 செண்டு ஆவணத்தில் தவறாக உள்ள காரணத்தினால் 01.12.2003ம் தேதி மறுபடியும் வாதிக்கு 15 செண்டு எழுதிக்கொடுத்தார் என்றால் இல்லை. 01.12.2003 தேதியிலேயே இரண்டு ஆவணங்கள் உள்ளது என்றால் சரிதான். 01.12.2003 தேதியிட்ட ஆவணத்தில் உள்ள சொத்து இந்த வழக்கு சம்பந்தப்பட்ட ஆவணமே இல்லை என்றால் சரியல்ல. 01.12.2003 தேதியிட்ட ஆவணத்தில் சாந்தி நிலத்திற்கு கிழக்கு, வெள்ளவாரிக்கு தெற்கு, தனபால் நிலங்களுக்கு வடக்கு, மேற்கு என்று ஜக்குபந்தி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஜக்குபந்திக்கு உட்பட்ட இடம் பூமியிலேயே இல்லை என்றாலும், அது கற்பனையான ஜக்குபந்தி என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

SARANYA S
Digitally signed by SARANYA S
Date: 2025.11.18 06:19:56 +0530

சார்புநீதிபதி

சாட்சியின் கையொப்பம்

வந்தவாசி